# மாநிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டு 25 ஆண்டு தொடங்குவதை ஒட்டி காஷ்மீர் பண்டிதர்கள் குழுவினர், ஜனவரி 19, 2014 அன்று பாஜக பிரதமர் வேட்பாளர் திரு நரேந்திர மோடி அவர்களிடம் சமர்ப்பித்த கோரிக்கை மனு

பெருமதிப்புக்குரிய அய்யா,

உங்களுக்கு இருக்கும் ஓய்வற்ற பணிகளுக்கு மத்தியில் எங்களை சந்தித்துப் பேச நேரம் ஒதுக்கியமைக்காக மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'இந்திய தேசிய அரசு' என்ற கருத்துக்கான சவால் காஷ்மீரத்தில் ஏதேனும் ஒரு வகையில் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. ஒட்டுமொத்த இந்து மத சிறுபான்மையினர் மாநிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்டது அதன் மிக மோசமான வெளிப்பாடுகளில் ஒன்று. இந்த மத அடையாளம், கீழ்த்தரமாக நடத்தப்படுதல், வெளியேற்றப்படுவதன் துன்பம் ஆகியவற்றை கடந்த காலத்திலும் அனுபவித்திருக்கிறது. ஆனால் 1990இல் நடந்தது மிக மோசமான பயங்கரங்களில் ஒன்று ஏனெனில் அது மதச்சார்பற்ற, ஜனநாயக, சுதந்திர இந்தியாவில் நிகழ்ந்தது.

இந்து சிறுபான்மையினர் மீதான குறிவைத்த கொலைகள் இந்துக்கள் ஒட்டுமொத்தமாக மாநிலத்தைவிட்டு வெளியேற வழிவகுத்தது, அதன் மூலம் அந்தப் பகுதியின் மக்கள்தொகையின் உள்ளடக்கம் மாறியது, அங்கு அப்பட்டமான மத அழிப்பு நடந்தது ஆகியவை சரியாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. ஜூரிச்சில் உள்ள சர்வதேச சட்ட வல்லுனர்களுக்கான ஆணையம், உள்துறை விவகாரங்கள் குறித்த துறை சார்ந்த பாராளுமன்ற நிலைக் குழு , மற்றும் தேசிய மனித உரிமை ஆணையம் ஆகிய புகழ்பெற்ற அமைப்புகள் இவற்றை ஏற்றுக்கொண்டுள்ளன.

இத்தனை இருந்தும் இதுவரை இந்த கூண்டோடு அழிக்கும் நடவடிக்கையின் காரணங்கள் மற்றும் காஷ்மீரில் அடிப்படைவாதத்தால் உந்தப்பட்ட இந்தியாவுக்கு எதிரான கிளர்ச்சி குறித்து விசாரிக்க எந்த ஆணையமும் உருவாக்கப்படவில்லை; விசாரணை தொடங்கவில்லை. 'உண்மைக்கான ஆணையம்' தொடங்குவதற்கான கோரிக்கையும் இன்னும் நிலுவையில் இருக்கிறது.

மத்திய அரசோ மாநில அரசுகளோ காஷ்மீரிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களை மீள்குடியமர்த்துவதற்காக எந்த ஒரு தெளிவான கொள்கையையும் வரையறுக்கவில்லை. பிரதமரின் காஷ்மீர் செயல்திட்டம் வெளியேற்றப்பட்ட இந்துக்களை மீள்குடியமர்த்துவதன் அரசியல் பரிமானங்கள் பற்றி ஒரு வார்த்தைகூட

குறிப்பிடப்படவில்லை. சிதறுண்டவர்களை கொத்துக் கொத்தாக மீண்டும் குடியமர்த்தும் திட்டம் மேட்டுக்குடித்தனமான பிரிவினைவாத உத்தி என்பதால் அது நிராகரிக்கப்பட்டுவிட்டது.

சிறுபான்மை இந்துக்களை ரத்தமும் சதையுமாக வெளியேற்றியதுடன் திருப்திகொள்ளாமல் காஷ்மீரின் நாகரீக வரலாற்றில் இந்து மதத்தின் தடங்களை ஒட்டுமொத்தமாக துடைத்தெறிவதற்கான முயற்சிகள் நிலைபெற்றுள்ளன. புகழ்பெற்ற சங்க்ராசார்யா மலை, ஹரி பிரபாத் உள்ளிட்ட பண்பாட்டு சிறப்புமிக்க தலங்களின் பெயர்கள் சட்டவிரோதமான வகையில் மாற்றப்பட்டுள்ளன. கோவில்களுக்கும் புனிதத் தலங்களுக்கும் சொந்தமான சொத்துக்கள் தனியாரால் மட்டுமல்லாமல் பொது நோக்கத்துக்கு என்ற பெயரில் அரசாங்கத்தாலும் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

மதச்சார்பின்மையை பாதுகாப்பதாக சொல்லிக்கொள்ளும் அரசியல், சமூக, பொதுமக்கள் அமைப்புகள் இது குறித்து கள்ள மௌனம் சாதிப்பதுதான் இந்த சோகத்தின் மிக மோசமான பகுதி. வெளியேற்றப்பட்ட இனத்தவரின் உரிமைகளைப் மீட்டுத் தருவதில் மத்திய, மாநில அரசுகளின் நேர்மையின்மை, மீள்குடியேற்றம், நடைமுறை ரீதியில் பாதுகாப்பானதாகவும் பொருளாதார ரீதியில் சாத்தியமானதாகவும் அமைவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கும் இரக்கமற்ற அணுகுமுறையின் மூலம் வெளிப்படுகிறது.

. மத்திய காலத்தில் இதுபோன்ற சகிப்புத்தன்மையற்ற சூழ்நிலை அவுரங்கஸீபால் உருவாக்கப்பட்டபோது , 1674ஆம் ஆண்டு வாக்கில், பண்டிதர் கிர்பா ராம் தத்தா மரியாதைக்குரிய குரு தேஜ் பகதூர் ஜி மகராஜ் அவர்களை சந்தித்து இந்த விவகாரத்தில் பண்டிதர்கள் சார்பில் தலையிட்டு சமரசம் செய்துவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மீண்டும், 19ஆம் நூற்றாண்டில் ஆஃப்கானிஸ்தான் ஆட்சியை எதிர்க்கும் காஷ்மீர் பண்டிதர்கள் இயக்கத்தின் தலைவர், பீர்பால் தாரா, 1819இல் மகாராஜா ரஞ்சித் சிங்கை சந்தித்து காஷ்மீரின் விடுதலைக்கு ஆதரவாகச் செயல்பட வைத்த குழுவுக்குத் தலைமை தாங்கினார்.

இந்த சந்திப்பை அவற்றின் தொடர்ச்சியாக நாங்கள் பார்க்கிறோம் ஏனென்றால் நீங்கள் ஊழல்வாதிகளின் தவறான ஆட்சியிலுருந்தும் நியாயமற்ற அரசியல் நலன் சார்ந்த பங்கீடுகளிலிருந்தும் நாட்டை விடுவிப்பீர்கள் என்று நாங்கள் முழுதாக நம்புகிறோம். அந்த நிலையை அடையத் தேவையான உழைப்பின் இயல்பை நாங்கள் அறிந்திருக்கிறோம். எனவே எங்களது சேவைகளை நீங்கள் சரியானது என்று நினைக்கும் வகையில் எந்த நேரத்திலும் வழங்க ஆயத்தமாக இருக்கிறோம்.

காஷ்மீரை நமது தேசத்தின் தொன்மை வாய்ந்த நாகரீகத்துக்கும் நவீன தேசிய உணர்வுக்கும் உண்மையிலேயே பெருமைதரக்கூடிய சின்னமாக உருவாக்குவதில் உங்கள் மேலோன கவனமும். முக்கியத்துவத்துவமும், செயல்பாடும் கிடைக்கும்

என்று நம்புகிறோம்.

வணக்கங்களுடன்,

காஷ்மீர் பண்டித இனத்தின் சார்பாக

முனைவர் கே.என்.பண்டிதா